2014

No. of Printed Pages : 5

2014

602594 **4411**

Register Number

**First Year**

# தமிழ்மொழி கற்பித்தல்

நேரம் : 3 மணி ] [ உச்ச மதிப்பெண்கள் : 100

## பகுதி - அ

I. **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க. **10x2=20**

1. பெயர்ச்சொல்லின் வகைகளை எடுத்துக்காட்டுடன் தருக.

2. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
   சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு
   (அ) கோடிட்ட சொற்களைப் பிரித்தெழுதுக.
   (ஆ) சோகாப்பர் என்பதன் பொருளைத் தருக.

3. முத்தமிழ், அறுசுவை - தொகைச்சொற்களை விரித்தெழுதுக.

4. 'தலைக்கு ஒரு பழங்கொடு' - ஆகுபெயரை விளக்குக.

5. முதுமகள், என்னுயிர் - இச்சொற்களைப் பிரித்து எவ்வாறு புணர்ந்ததென விதி கூறுக.

6. இரண்டாம் வேற்றுமை எவ்வெப் பொருள்களில் வரும் என்பதை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

7. கீழுள்ள வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் வல்லொற்றைச் சேர்த்தும், பொருத்தமற்ற இடங்களில் வல்லொற்றை நீக்கியும் எழுதுக.

   முத்துகுமார் மருந்து கடைக்குச் சென்றான். வழியில் நாய் குட்டியை பார்த்தான். அதற்கு ரொட்டி துண்டை கொடுத்தான். பின்னர்க் கடைக்கு சென்றான். தன்னிடமிருந்தப் பணத்திற்கு மருந்துகள் வாங்கினான்.

8. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
   என்பும் உரியர் பிறர்க்கு
   - இக்குறளுக்கான பொருளை உரைநடைப்படுத்துக.

[ Turn over

9. பின்வரும் தொடர்களைப் பிழைநீக்கி எழுதுக.

(அ) ஆடுகள் பயிரைத் தின்றது

(ஆ) நீங்கள் எல்லாரும் சுற்றுலா போய் வந்தார்கள்

10. உருபு மயக்கம் என்றால் என்ன?

II. **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்க. 5x4=20

11. தொழிற்பெயர் என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்துக்காட்டு தந்து விவரி.

12. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் - வேறுபடுத்துக.

13. பின்வரும் நூற்பாவை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

''இஈஐவ்வழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படுமெய் யென்றாகும்''

(நன்னூல். 162)

14. பின்வரும் உரைப்பகுதியின் நடைச்சிறப்பை விளக்குவதோடு அருஞ்சொற்களை எடுத்து எழுதி பொருத்தமான தலைப்பு தருக.

''கைபுனைந்தியற்றா ஓரழகே அழியா அழகெனப்படும். கைபுனைந்தியற்றும் அழகு அழியுந்தன்மையது 'கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு' என்றார் நக்கீரனாரும். கையால் செய்யப்படுவது செயற்கை. கையால் செயப்படாதது இயற்கை. மலையும் ஆறும் காடும் கடலும் எவர் கையால் ஆக்கப்பட்டன? அவை எக்கருவிகளால் செய்யப்பட்டன? ஞாயிறும் திங்களும் விண்மீன்களும் எவரால் செய்யப்பட்டன? புனலுக்குத் தண்மை ஈந்தவர் எவர்? நெருப்புக்கு வெம்மையூட்டியவர் யாவர்? இயல்பாக அரும்பிய இவற்றின் அழகே கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பாகும். மற்றையது போலி''.

**15.** கீழுள்ள உரையாடற் பகுதியைச் செய்தியாக்குக.

மாணவர்கள் : வணக்கம் ஐயா

ஆசிரியர் : வணக்கம். கார்த்திகா! நேற்று நீ தொலைக்காட்சியில் எந்தெந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தாய் சொல்?

கார்த்திகா : மயிலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம் முதலான கலை நிகழ்ச்சிகளைப் பார்த்தேன். மகிழ்ச்சியாக இருந்தது.

ஆசிரியர் : நன்று. கண்ணா நீ தொலைக்காட்சியில் எந்த நிகழ்ச்சியை விரும்பிப் பார்ப்பாய்?

கண்ணன் : பறவைகள், விலங்குகள் பற்றி 'ஆவணப்படம்' பார்க்கத்தான் எனக்கு மிகவும் பிடிக்கும்.

ஆசிரியர் : இவை தவிர, 'காண்போம் கற்போம்' என்னும் நிகழ்ச்சி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிறது. அதை நீங்களும் கவனித்துக் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்.

மாணவர்கள் : சரி ஐயா!

ஆசிரியர் : மிகவும் நல்லது. தொலைக்காட்சியில் நாம் எப்போதும் நல்ல நிகழ்ச்சிகளையே தேர்ந்தெடுத்துப் பார்க்க வேண்டும்.

**16.** பைந்தமிழ், செங்கோல் - இச்சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக.

**17.** 'மரத்தின் பயன்கள்' எனுந் தலைப்பில் கட்டுரை எழுதுவதற்குத் தேவையான குறிப்புச் சட்டகம் ஒன்று தயார் செய்க. கட்டுரையில் பயன்படுத்தப் படவேண்டிய பொருத்தமான பழமொழிகள், மேற்கோள்கள் நான்கினை எழுதுக.

**18.** தலைவாரிப் பூச்சூடி உன்னைப் - பாட
சாலைக்குப் போ என்று சொன்னாள் உன் அன்னை!
சிலைபோல ஏனங்கு நின்றாய் - நீ
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்?
விலைபோட்டு வாங்கவா முடியும்? - கல்வி
வேளைதோ றும்கற்று வருவதால் படியும்!
மலைவாழை அல்லவோ கல்வி? - நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி!

- பாவேந்தர் பாரதிதாசன்

- இப்பாடலில் அமைந்துள்ள எதுகை, மோனையை விளக்கி, 'புதல்வி' என்ற சொல்லுக்குப் பொருள் தருக.

[ Turn over

## பகுதி -ஆ

III. **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க. 10x2=20

19. ஒரு பாலுக்கே உரித்தான மறுபாலுக்கு இணைச்சொல் இல்லாத தமிழ் மொழியிலுள்ள சொற்கள் நான்கினை எழுதுக.
20. தொடக்க வகுப்புகளுக்கான தொடர் செயல்களைக் கூறுக.
21. இரட்டை வழக்கு என்றால் என்ன? அவை யாவை?
22. மாணவர்களிடம் உரையாடல் திறனை மேம்படுத்த ஆசிரியர் மேற்கொள்ளும் வழிமுறைகள் யாவை?
23. சுதர்சனா ஊருக்குச் சென்று தந்தையைப் பார்த்து விவரங்களைக் கூறிவிட்டுத் திரும்பினாள்.
    - இவ்வாக்கியத்தைப் பொருள் புரியும் வண்ணம் படிப்பதற்கேற்பச் சாய்கோடிட்டுக் காட்டுக.
24. விதிவருமுறையில் இலக்கணம் கற்பித்தலின் நன்மைகள் யாவை?
25. பல்வகுப்பு கற்பித்தல் என்றால் என்ன?
26. தமிழ்ப் பேரகராதியின் கூறுகள் யாவை?
27. கற்பித்தல் குறிப்பு என்றால் என்ன?
28. கற்பித்தலில் ஆயத்தப்படுத்துதல் ஏன் அவசியமாகிறது?

IV. **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்க. 5x4=20

29. விதிகளின் தொகுப்பே மொழி - விளக்குக.
30. வட்டாரக் கிளைமொழி அறிவு ஆசிரியருக்குத் தேவை-விவரி.
31. ஐந்தாம் வகுப்பில் பேசுதல் திறனை வளர்க்க மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் நான்கினை விளக்குக.
32. நல்ல கையெழுத்தின் நல்லியல்புகள் யாவை?
33. துணைப்பாடம் கற்பித்தலின் நோக்கங்கள் யாவை?
34. மொழிப்பாடம் கற்பிப்பதற்கு எவ்வகையான துணைக்கருவிகளைப் பயன்படுத்துவாய் என்பதை விளக்குக.
35. உற்றுநோக்கலின் தேவை, உற்று நோக்கல் முறைகள் பற்றி எழுதுக.
36. பாடம் கற்பிப்புத் திட்டத்தின் இன்றியமையாமை, நன்மைகள், பண்புகள் யாவை?

## பகுதி - இ

V. **ஒவ்வொரு** வினாவிற்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. 2x10=20

37. (அ) கேட்டல் திறனை வளர்க்கும் வழிவகைகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) செயல்திட்ட முறையினை விளக்கி தொடக்க நிலை வகுப்புகளுக்கு எவ்வகையான செயல்திட்டங்களை வழங்குவாய் என்பதைக் குறிப்பிடுக.

38. (அ) உரைநடை கற்பிக்கும் முறையை விளக்குக.

**அல்லது**

(ஆ) கற்றல் - கற்பித்தல் பொருட்கள் தயாரித்தல் பற்றிக் கட்டுரை வரைக.

-oOo-